அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை

விகாரி ✿ ஆனி (ஜுன் – 2019) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்


1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ..... 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ..... 6
3. மகான் பதஞ்சலி மகான் அருளிய ஆசி நூல் ..... 11
4. 29.10.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை** **திருவடி ஞானோபதேசம் பாகம் - 2** ..... 17
5. ஆனி மாத பௌர்ணமி விழா ..... 36
6. ஆனி மாத பௌர்ணமி விழா ..... 36
7. அன்பர்களின் அனுபவங்கள் ..... 37
8. மகான் கொங்கணமகரிஷி அருளிய ஆசி நூல் ..... 41
9. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ..... 43
10. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ..... 53


ஓங்காரக்குடில் ஆசான்

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளிடம்**

**ஆசிபெறும் நேரம்**

**தினசரி மதியம் 3 மணி**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

காணவே ஞானயுகம் படைக்க
கந்தன் சக்திமிகு சூட்சுமமாக
ஞானமாக வந்த அரங்க ஞானியை
நல்கி திருவடி தீட்சை பெற்று
பெற்றுமே உலகோர் வருதலுற
பேருலகமே பெருமாற்றம் பெறும்
ஆற்றலாக அரங்கன் சக்தியாக
அருட்தகவல்கள் தாங்கி வரும்
தாங்கி வரும் ஞானத்திருவடி நூலை
தரணியோர் பெற்று வாசிக்க
ஓங்காரம்பட நித்தம் பூஜிக்க
உலகோர் ஞான முதிர்வும் தேற்றமும் பெறுவர்

– மகான் பதஞ்சலி மகான் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 43 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான ‘‘**ஞானயுகம்**’’ அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.




அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# விகாரி வருடம் ஆனி மாத ஞானத்திருவடி நூலிற்கு மகான் பதஞ்சலி மகான் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. வேலவனே வெற்றிவேல் முருகனே
வேள்விகளுக்கும் மேலான தருமம்
உலகமெங்கும் செய்து வளர்க்க
உண்மை ஆன்மீகம் மலர

2. மலரவே உன் திருவிளையாட்டாக
மாதவசியாக கலியுகம் தன்னில்
மலர்ந்து அவதாரம் புரிந்து
மாண்புகள் புரிகின்ற முருகா

3. முருகனே ஞானத் திருக்குமரனே
முழுமை ஞானம் தருகின்ற கந்தனே
பெருமை மிக்க பிரணவ சொரூபனே
பேதமகற்றி சன்மார்க்க வழியில்

4. வழியில் ஒரே குடை கீழ்
வல்லமைபட அற்புதம் நிகழ்த்த
அழியாமை எனும் ஞான பூசை
அன்னதானம் செய்து வரும் அப்பனே

5. அப்பனே அரங்கன் வடிவில்
ஆறுமுகனுன்னை காண்கின்றோம்
ஒப்பு கொண்டு ஞானியர் கூட்டங்கள்
ஓங்காரம்பட அரங்கன் ஞானமாக

6. ஞானமாக வரும் ஞானத்திருவடி நூலுக்கு
ஞானிகள் மாதாந்திர ஆசி தருகின்றோம்
ஞானமாக விகாரி ஆனி திங்களில்
நாட்டிடுவேன் பதஞ்சலி மகான் யானும்

7. யானும் ஞானத்திருவடி நூலுக்கு
உயர் ஆசிதனை அருளுவேன்
தான தருமம் கொண்டே உலகில்
தன் கொள்கை வளர்க்கின்ற ஞானி

8. ஞானி அரங்கனை போலே
நாடெங்கிலும் நல்குரு இல்லையப்பா
இனிமைபட எளிமைபட மக்களை
எந்தவித கட்டங்களிலிருந்தும் மீட்க

9. மீட்கவே தயவு எனும் திறவை
மேன்மைபட அவர்களே அறியா வண்ணம்
மாட்சிமைபட உருவாக்கி அருளும்
மகத்துவம் புரிகின்ற தவசி

10. தவசி அரங்கன் தரும வழியை
தடைபடா மக்கள் இணைந்து
அவசியம் தொண்டு ஆற்றி
ஆசானாக ஏற்று வருக

11. வருகவே பதவியாளர்கள் ஆளுபவர்கள்
வணங்கி முருகப் பெருமானின்
தரும வழியை ஏற்று வருக
தயவு கூட்டி மக்கள் சேவையில்

12. சேவையில் தனித்தன்மை கூடி
செப்பிடுவேன் தலைமை சிறக்கும்
அவணியே தருமநெறி குன்றா
ஆளுமை சிறந்து வளம் காணும்

13. காணவே பிரணவக் குடிலில்
கந்தமகா சக்தி தானும்
ஞானமாக அன்னதானமாக
ஞானத்திருவடி நூலாகவும் பரவ

14. பரவுகின்ற அரங்க ஞானியரின்
பரோபகாரமிக்க புகழ் தன்னை
தரணியெங்கும் மக்கள் பரப்பிட
தரணியே நல் தேற்றம் காணும்

15. காணவே கலிவாழ் மக்களே
கனிவும் துணிவும் மனத்தெளிவும்
தானமும் தருமமும் ஞானபலமும்
தனித்துவம் சகல வளமும் காண

16. காணவே துறையூர் புண்ணிய பூமி
கனிவேலன் அமைத்த குமரகிரி
ஞானமிக்க ஏழாம் படை வீடு
ஞானிகள் சூழ்ந்த ஞான வீட்டை

17. ஞானவீட்டை தேடிக் கண்டு
நம்பிக்கை கொண்டு வருதலுற
தானதருமத்தில் உதவி நின்று
தன்னார்வ தொண்டு பெருக்கி வர

18. வருக வருகவே மக்களுள்ளே
வந்தடையும் சர்வ பலமும்
முருகா முருகா எனும் செபதபம் கூட
முழுமை மாற்றமும் ஏற்றமும் காணும்

19. காணவே ஞானயுகம் படைக்க
கந்தன் சக்திமிகு சூட்சுமமாக
ஞானமாக வந்த அரங்க ஞானியை
நல்கி திருவடி தீட்சை பெற்று

20. பெற்றுமே உலகோர் வருதலுற
பேருலகமே பெருமாற்றம் பெறும்
ஆற்றலாக அரங்கன் சக்தியாக
அருட்தகவல்கள் தாங்கி வரும்

21. தாங்கி வரும் ஞானத்திருவடி நூலை
தரணியோர் பெற்று வாசிக்க
ஓங்காரம்பட நித்தம் பூஜிக்க
உலகோர் ஞான முதிர்வும் தேற்றமும் பெறுவர்

22. பெறுவரே குருராசன் தலைமைபட
பிறவா பெரும் பேறும் அடைவர்
ஆறுமுகா அரங்கா தேசிகா வாழ்க
அறிவித்த ஞானத்திருவடி நூலுக்கு பதஞ்சலி என் ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

விகாரி வருடம் ஆனி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் பதஞ்சலிமுனிவர் அருளிய ஆசி நூலின் சாரம் :

ஞானத்தலைவனே வேலவா! முருகா! வெற்றிவேல் முருகா! வேள்விகள் செய்து பெறும் பயன்களை விட ஏராளமான பயன்களை தருகின்ற உயர்வான

தருமத்தினை உலகமெலாம் செய்து தர்மம் வளர்த்திடவும் உண்மை ஆன்மீகம் உலகினில் மலர்ந்திடவும், முருகா தாம் திருவிளையாடல் புரிந்து மகா தவசியாக அரங்கமகா தேசிகனாராக இக்கலியுகத்தினில் மலர்ந்து அவதாரம் செய்து மாண்புகளை அற்புதங்களை செய்கின்ற முருகப்பெருமானே, ஞானத்திருக்குமரனே இவ்வுலகிற்கு முழுமை ஞானம் தந்தருளி ஞானவழியில் மக்களை செலுத்தும் கந்தனே பெருமைமிக்க ஓங்காரரூபனே உலகினில் மக்களிடையே உள்ள சாதி, மத, இன, மொழி, பேதாபேதங்களை நீக்கி சன்மார்க்க நெறியில் அனைவரையும் பின்பற்றி வரச் செய்து உலகினை ஒரு குடையின் கீழ் வரச் செய்திட, வல்லமைகளுடன் அற்புதங்களை ஏராளமாய் நிகழ்த்தி அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வைத் தந்தருளுகின்ற ஞானபூஜைகளாய் செய்து தருமம் வளர்க்கும் முருகா, தாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வடிவினில் வெளிப்பட்டு நிற்க, அரங்கமகா தேசிகனாரின் வடிவினில் முருகா உம்மை ஞானிகள் நாங்கள் எல்லாம் கண்டு பூரிப்படைகின்றோம் அப்பா.

ஞானியர் கூட்டம் எல்லாம் அரங்கனே முருகன், முருகனே அரங்கன் என்றே ஒப்புக் கொண்டு, முருகா உமது அருள் வெளிப்பாடாக அரங்கனின் ஞானமாக வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலிற்கு ஞானிகள் நாங்களெல்லாம் மாதந்தோறும் அருளாசிகளை தந்து நூல்கள் மூலமாக ஆசி வழங்கி வருகின்றோம்.

அதன் வகையினிலே ஞானமாக வெளிவரும் ஞானத்திருவடி நூலிற்கு பதஞ்சலிமுனிவர் யானும் உயர்வான ஆசிகளை வழங்கி நிற்கின்றேனப்பா என்கிறார் மகான் பதஞ்சலிமுனிவர்.

தூயநெறிக் கொள்கையாம் ஞானக் கொள்கைகளை தானதரும நெறி கொண்டு வளர்த்து மக்களை நல்வழிப்படுத்தி ஞானநெறியில் வழிநடத்துகின்ற அவதார மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனைப் போல் உலகினில் வேறு நல்ல குரு எவரும் இல்லையப்பா. பேரன்பு கொண்டு உலக மக்களை எந்தவிதமான கஷ்டத்தில் அவர்கள் இருந்தாலும் அந்த கஷ்டங்களில் இருந்து மீட்டு காத்திடவே அவர்களிடத்து தயவு எனும் ஞானத்திறவுகோலை அவர்களே அறியாதவாறு சர்வ வல்லமையுடன் அவர்களுக்குள் உண்டாக்கி தயவு உணர்வை அவர்தம்முள் பெருகச் செய்து தர்மசிந்தனையை வளர்த்து அருள் செய்து மீட்டு காக்கின்ற மகத்துவம்மிக்க மகா தவசி அரங்கனைப் போல் வேறெவரும் இல்லையப்பா.

மகா ஞான தவசி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக நன்மைக்காக அருளிய தருமத்தின் வழியை ஏற்று, அரங்கன் தர்மம் தடைபடாமல் நடந்திட மக்களெல்லாம் ஒன்றிணைந்து அரங்கனின் தர்மங்கள் வளர, தொண்டுகள் செய்வதுடன் பொருளுதவிகள் செய்தும் வருவதோடு, ஞானமருளும் அரங்கனை குலகுருவாக ஏற்றுக் கொண்டு அரங்கனை ஞானவழியில் பின்தொடர வேண்டும்.

நாட்டினில் பொறுப்பினில் உள்ள பதவியாளர்களும், ஆட்சி புரிபவர்களும் அரங்கனை வணங்கி அரங்கன் கூறும் முருகப்பெருமானின் தருமவழியினை ஏற்றுக் கொண்டு தர்மங்கள் செய்து தயவினை பெருக்கி நாட்டு மக்களுக்கு சேவைகள் செய்து தனித்தன்மையுடன் தொண்டுகளாக ஆட்சி நடத்தி வர, ஆட்சி செய்யும் தலைமை பண்பும் தலைமையும் வலுப்பெற்று சிறப்படையும். உலகமே தருமநெறி குன்றாமல் சிறப்பான ஆட்சியாக அமைந்து நாடு எல்லா வளங்களையும் பெற்று சிறப்படையும்.

உலகை காப்பதற்காகவே உருவாக்கப்பட்ட வல்லமைமிக்க ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடிலினில் முருகப்பெருமானின் சக்தியானது ஞானமாக படர்ந்து விரிந்து ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. ஆங்கே முருகப்பெருமானின் ஆற்றல் அன்னதானமாக செயல்பட்டு மக்களை வாழ வைத்து, தருமம் பெருக்கி, தயவு கூட்டி செயல்படுகிறது. ஞானத்திருவடி நூலாக முருகப்பெருமானின் ஞானம் வெளிப்பட்டு நிற்கின்றது.

இவ்விதம் ஞானமாகவும், தருமமாகவும், தயவாகவும் பரவி விரிந்து நிற்கும் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கனின் பரோபகாரம்மிக்க புகழினை உலகமெங்கும் மக்களெல்லாம் தாம் பெற்ற பெரும் பேறாய் எண்ணி உலகினில் அரங்கன் புகழ் பரப்புதல் தமது கடமையாக எண்ணி பரப்பி வந்தால் இந்த உலகமே தர்மத்தின் வழி சென்று தயவு மிகுந்து ஞானிகளின் அருளாசிகளைப் பெற்று நல்ல முன்னேற்றமும் ஞானத்தேற்றமும் அடைந்து சிறப்பான உலகமாக மாறிடும்.

கலியுக மக்களே துன்பப்பட்டு, மனம் குழம்பி எது உண்மை? எது பொய்? எனத் தெரியாமல் மாயையுள் அகப்பட்டு மயங்கி நின்று மனம் கலங்கி நிற்கின்றவர்களே நீங்களெல்லாம் துன்பத்தில் இருந்து விடுபட்டு மனத்தெளிவும் மனத்துணிவும் அறிவினில் தெளிவும் பெற்று கனிவுமிக்க தயவுடைய நன்மக்களாய் மாறி ஞானம் பெறவும், தானதரும பலம் பெறவும், தனித்துவம் மிக்கவர்களாக சகல வளமும் பெற்று, சிறப்புமிக்க வாழ்வை வாழ வேண்டுமாயின் இந்திய தேசத்திலே தமிழகத்திலே புண்ணிய ஞான பூமியாக துறையூர் கொல்லிமலை அடிவாரத்திலே பழனிமலை வாழ் முருகப்பெருமான் அமைத்திட்ட குமரகிரி எனும் ஞானம்மிக்க ஏழாம் படை வீட்டினை ஞானம் சூழ்ந்து செறிவுள்ள ஞானவீட்டினை பயபக்தியுடன் கண்டு முருகப்பெருமானை, அரங்கனை நம்பிக்கையுடன் ஆங்கே சரணாகதியாக வணங்கி குமரகிரியில் நடக்கின்ற தானதருமப் பணிகளுக்கு உதவிகள் செய்தும், தன்னார்வமாய் தொண்டுகள் செய்தும் வரவர, தன்னார்வ தொண்டு செய்யும் மக்களுக்குள்ளே சர்வபலம் வந்தடையும்.

முருகா, முருகா, முருகா என்றே மனம் உருகி தினம்தினம் மறவாமல் உங்களது வாழ்வினில் ஜெபதபங்களை அதிகமாக செய்து வரவர, உங்களது வாழ்வு முழுமையான மாற்றங்களை காணும், நல்ல முன்னேற்றங்கள் தாமாகவே வந்தடையும்.

உத்தம மகா ஞானி ஏழாம் படை வீட்டு நாயகன் ஓங்காரக்குடிலாசான் ஞானயுகம் படைக்கவே முருகப்பெருமானே அவதாரமாக வந்திட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை பயபக்தியுடன் பணிந்து வணங்கி அண்ணல் அரங்கரின் திருவடிகளே கதியென சரணாகதி அடைந்து அரங்கரிடத்து திருவடி தீட்சையினை பெற்று, அரங்கரின் அருளாசிகளை உலகோர் பெற்றிட உலகமெலாம் அரங்கரின் அருளாசியால் ஞானிகளின் தயவால் பெரும் மாற்றங்களை உலகப் பெருமாற்றமாக அடைந்து கலியுகமே மாறி ஞானயுகமாகவும் ஆகிடும்.

சர்வ வல்லமைமிக்க அரங்கரின் சக்தியாக ஞானமாக அருட்தகவல்களை, அரங்கரின் உபதேசங்களை தாங்கி வருகின்ற ஞானத்திருவடி நூலினை உலக மக்கள் வாங்கி பயபக்தியுடன் பூஜித்து படிக்கவும், படிக்கச் சொல்லி கேட்கவும் தினம்தினம் பூஜையில் வைத்து பூஜிக்கவும் செய்திட்டால் அவரெல்லாம் ஞானமுதிர்வும் ஞானத்தில் முழுமை தேர்ச்சியும் அடைவார்கள்.

ஞானத்திருவடி நூலை அரங்கரே நம்முன் தோன்றி உரைப்பதாக எண்ணி பயபக்தியுடன் பூஜித்து வாசித்து பிறர் படிக்க வாங்கிக் கொடுத்து புண்ணியத்தை சேர்த்து கொள்பவரெல்லாம் அரங்கர் தலைமையை ஏற்று செயல்பட்டு ஞானவழி சென்று ஞானம் பெற்று பெறுதற்கரிய பிறவாப் பெருநிலையை பெற்று சிறப்படைவார்கள்.

**ஆறுமுகனே அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க** என ஞானத்திருவடி நூல் மூலம் ஞானம்பெற நல்வாய்ப்புகளை கூறுகிறார் மகான் பதஞ்சலிமுனிவர்.

–சுபம்–

ஞானிகள் திருஉருவப்படங்கள்,
ஆசான் அருளிய நூல்கள்,
தினசரி, மாத நாட்காட்டிகள்,
ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் CD
மற்றும் ஞானத்திருவடி நூல்
கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**
ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.
✆ 04327–255184, செல்: 90950 33311
மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

ஓங்காரக்குடிலாசானிடம் தீட்சை பெற விரும்புகிறவர்கள்
தொடர்புக்கு : **ந.நடராஜன்,**
கொள்கை பரப்பாளர், செல்: 98947 55784

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
திருச்சி மாவட்டம், துறையூர், ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
29.10.1988 அன்று அருளிய

# திருவடி ஞானோபதேசம் பாகம் – 2

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

**செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை**
**வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை**
**இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை**
**நல்ல வரனெறி நாடுமி னீரே.**

**– திருமந்திரம் – இதோபதேசம் – கவி எண் 2103.**

**செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை** – வல்லமை பொருந்திய ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்வதே இதற்கு உபாயம். ஆசான் அகத்தீசர் நாமத்தை, முடிந்த அளவிற்கு சொல்லுங்கள். இரண்டு மணி நேரமோ, மூன்று மணி நேரமோ கடுமையாக பூஜை செய்யக்கூடாது. அந்த பூஜை சிறக்காது. அதே வேலையாகவும் இருக்கக் கூடாது.

சலிப்பு ஏற்படுகின்ற அளவிற்கு பூஜை செய்யக் கூடாது, பூஜையும் அளவுகடந்து செய்யக் கூடாது. மனம் லயிக்கும் அளவிற்கு பூஜை செய்ய வேண்டும். பத்து அல்லது பதினைந்து நிமிடம் செய்யலாம். சலிப்பு வந்தால் பூஜையை நிறுத்திவிட வேண்டும். இப்படி பூஜை செய்கின்றவன்தான் இந்தத் துறைக்கு வர முடியும்.

**செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை** – ஆசான் அகத்தீசரை சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி காலையில் பத்து நிமிடம் ஆசான் நாமத்தை நூற்றியெட்டு முறை சொல்லி பூஜை செய்வான். பிறகு வேலைக்கு செல்வான், சம்பாதித்து பொருள் திரட்டுவான். திருமணம் செய்து கொள்வான். மனைவி மக்களுக்கு உற்றத் துணையாக இருப்பான். இப்படி காலை, மாலை பூஜை செய்து, ஆசான் அகத்தீசரின் முழு ஆசியைப் பெறுவான். இதற்கு பத்து, பதினைந்து வருடம் ஆகும். பதினைந்து வருடம் தொடர்ந்து பூஜை செய்து

வந்தால்தான், மகான்களின் முழு ஆசி கிடைக்கும். நாற்பது வயதில் முழு ஆசியைப் பெறலாம். அதுவரையிலும் மனம் செம்மைப்படுவதற்கு திருமணம் அவசியம். இவனுக்கு அனுபவம் ஏற்பட்டதால், இவனிடம் இல்லறத்தை சற்று ஒதுக்கி வை என்று சொல்வார்.

இந்தத் துறையில் வருகின்றவர்கள் ரகசியத்தை அறிந்தவர்கள். ரசத்தை கட்ட விரும்புகின்றவர்கள், சார்ந்தும் சாராது இருப்பார்கள்.

பசிக்கு உணவு சாப்பிடுவதால் உடம்பில் காமவிகாரம் ஏற்படுகிறது. காமவிகாரம் உடம்பில் ஏற்படும்போது, அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கக் கூடாது. அதன் போக்கில் விட்டுப்பிடிக்க வேண்டும். கட்டுப்பாடின்றி பல பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டால் பகையும், நோயும் சூழ்ந்து கொள்ளும். இதற்கு ஒரே தீர்வு, திருமணம் செய்து கொண்டு, அதன் மூலமாக தனது வாழ்க்கையை செம்மையாக நடத்திக் கொண்டு வரவேண்டும்.

ஏதோ இரண்டு மணி நேரமோ அல்லது நான்கு மணி நேரமோ அல்லது நாற்பத்தெட்டு நாளோ கடுமையாக பூஜை செய்து பெறுகின்ற சக்தி அல்ல இது.

**என்றென்றோது** என்று சொன்னதாலே, தொடர்ந்து ஞானிகள் நாமத்தை சொல்லிக்கொண்டே வர வேண்டும். இப்படி பத்து பதினைந்து வருடம் பாடுபட்டுக் கொண்டே வர வேண்டும். அதன் பிறகே ஒரு ஆசான் கிடைப்பான். அவன்தான் சுவடி பார்க்க சொல்வான். அதன் மூலமாக உனது நிலையை தெரிந்து கொள் என்று சொல்வார். இப்படி பூஜை செய்து சுவடி பார்ப்பதால், அவனுக்கு நேரடியாக சொல்வார்கள். அவர்கள் சுவடி மூலமாக காட்டுகின்ற பாதை துல்லியமாக இருக்கும்.

அப்படி பூஜை செய்து சுவடி பார்க்கும் போது, உனது மனைவிமக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து விட்டு வா என்பார்கள். பிறகு இன்றைய தேதியிலிருந்து மனைவி மக்களை விட்டுவிட்டு இந்தத் துறைக்கு வா என்பார்கள். நாற்பது, ஐம்பது வயது வாழ்ந்த பிறகு மனைவி மக்கள் என்ன? ஒன்று அதை சார்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் வெளியே வந்துவிடலாம். அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்து விட்டு, வெளியே வர வேண்டும்.

இவன் வெளியே வந்து ஒரு ஆசிரமம் அமைத்துக் கொண்டு, தினமும் ஆசானை தொடர்பு கொள்ளும் போது, வாசிப்பயிற்சிக்குரிய மார்க்கத்தை தருவார்கள். வாசி பயிற்சிக்குரிய மார்க்கத்தை கொடுத்து, இரண்டு வருடம் வாசியோடு தொடர்பு கொள்ள சொல்வான். சூரியகலையை, சந்திரகலையை இயக்குகின்ற மார்க்கம், அதை கட்டுகின்ற மார்க்கம் என இப்படி வகுத்துக் கொடுத்து கொண்டே இருப்பான்.

இவன் தன்னுடைய முயற்சியால் இடகலை பிங்கலையை இயக்குவான். இடகலை பிங்கலையை இயக்குகின்ற மார்க்கத்தை அவன் புரிந்து கொள்வான்.

இவனுடைய தகுதியைப் பார்த்து, திடீரென்று ஒரு நாள் ஆசான் இடகலையை பிங்கலையை இயக்கி ஒடுக்கி அவனுடைய புருவமத்தியில் ஒடுங்கிவிடுவான். அதற்கு பிறகு உப்பில்லா உணவை மேற்கொள்வான். ஆசான் அவன் உள்ளிருந்து செயல்பட துவங்குவார்.

இப்படி செயல்பட ஆரம்பித்து, அடுத்தடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற சந்தேகத்திற்கு சுவடி மூலமாக தெரிந்து கொள்ள வேண்டும். சத்குரு என்பவர்கள் மோன நிலை பெற்றவர்கள். சொற்குரு அடுத்தடுத்த விஷயங்களை சொல்லிக் கொண்டே வருவார்கள். ஐம்பது வயதில் தொடங்கினால், எழுபது வயதில் ஞானவாழ்க்கை சித்திக்கும். இந்த வாய்ப்பை பெறுவதற்கு, குருவின் துணை வேண்டும்.

எந்த சுக்கிலத்தை கட்டுவது என்ற முறை இருக்கிறது. இவன் குருவின் அருளைப் பெறும்வரையில், உடம்பில் இருக்கிற அசுத்த சுக்கிலத்தை இல்லறத்தில் இருந்து கொண்டு, மனைவி மூலமாக நீக்கிக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் மனதோடு போராடிக்கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குறிப்பிட்ட ஆண்டுக்கு பிறகு, உப்பில்லா உணவு உண்ணத் துவங்குவான். உப்பில்லாமல் சாப்பிட சாப்பிட உடம்பு தீர்த்தமாகும். மூலக்கனல் எழுப்பிய பிறகு, இந்த சுக்கிலத்தில் ஏற்கனவே இருந்து வந்த கழிவுகள் எல்லாம் நீங்கி அதன் பிறகு மணியாகும்.

**ஆச்சப்பா புலத்தியனே சூதங்கட்ட**
**ஆராலும் முடியாது அறிவான்சித்தன்**

ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்லுகின்ற மக்கள்தான் சித்தராக இருக்க முடியும். அவன்தான் சூதத்தை கட்டும் முறையை அறிவான். இந்தத் துறையில் வருகின்றவர்கள் சூதம் என்று சொல்லப்பட்ட ரகசியத்தை அறிந்தாலும், ஒரு மனிதனுக்கு துணை அவசியம், மனைவி மக்கள் மிக அவசியம். பொருள் திரட்டி, மனைவி மக்களுடன் வாழ்ந்து அன்பு செலுத்தி, விருந்தை உபசரித்து வாழ வேண்டும்.

இந்தத் துறையில் வருகின்றவர்கள், பொருளை திரட்டுவதற்காக பொய் சொல்லக் கூடாது. பொய் சொல்லி பிறர் சொத்தை அபகரித்து வாழக் கூடாது. புனிதமான இந்தத் துறையை, பொருள் பற்றினாலோ, காமத்தாலோ, விகாரத்தாலோ, யான் என்ற கர்வத்தாலோ மாசுபடுத்தக் கூடாது. இவனுடைய செயல் மற்றவர்கள் மனதை புண்படுத்துமாறு இருக்குமேயானால், இந்தத் துறைக்கு வர முடியாது.

ஆகவே ஒரு செயல் செய்வதற்கு முன்னே, ஆணித்தரமாக சிந்தித்து, இது நீதிக்கு உட்பட்டதா என்பதை அறிய வேண்டும். பிற உயிர்களுக்கு துன்பம் இல்லாமல் வாழ ஆசைப்படுகிறேன், அதற்குரிய பரிபக்குவம் எனக்கு வேண்டுமென்று ஆசானிடம் கேட்க வேண்டும். பிறரைக் கண்டு பொறாமைப்படாமலும், பிறரை வஞ்சிக்காமலும், பிறரை அடக்கி ஆள வேண்டுமென்ற தீயகுணம் போன்ற தவத்திற்கு ஆகாத செயல்களை சிந்திக்கவும், செயல்படுத்தவும் கூடாது.

எனக்கு தவத்திற்குரிய பரிபக்குவம் இல்லை, அதற்குரிய பரிபக்குவத்தை கொடு என்று கேட்கிறான். அதேசமயத்தில் தினந்தோறும் உமது பாதத்தைப் பற்றி, பூஜை செய்யக்கூடிய பரிபக்குவத்தையும் வாய்ப்பையும் எனக்கு தாருங்கள் என்று ஆசானிடம் கேட்க வேண்டும். இதுதான் இந்தத் துறையில் வருகின்ற மக்களுக்கு மிகவும் முக்கியமானது.

தினமும் பூஜை செய்வதற்குரிய கால சூழ்நிலை அமைய வேண்டும். சுற்றுப்புற சூழ்நிலை அமையாவிட்டால் பூஜை செய்ய மாட்டான். ஆகவே பூஜை செய்யும்போதே, தினமும் உமது பாதத்தைப் பற்றி பூஜை செய்ய அருள் செய்யுங்கள் என்று அந்தரங்கமாக கேட்டுக் கொண்டே வர வேண்டும். இப்படியே கேட்டுக் கொண்டு வரவர, இயல்பாகவே அந்த வாய்ப்பு அமையும். எல்லோருக்கும் பூஜை செய்யும் வாய்ப்பு அமையாது. பூஜை செய்வதற்கு அவர்களுடைய அருள் வேண்டும். அப்படியே இருந்தாலும், உள்ளம் உருக பூஜை செய்வதற்கு அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டும்.

பிற உயிர்களுக்கு துன்பம் இல்லாமல் வாழ்வதற்கும், உணவு பழக்கவழக்கத்திற்கும் ஆசானிடம் கேட்க வேண்டும். புலால் உண்ணும் பழக்கம், பிற்காலத்தில் மாறிவிடும். சுத்த சைவத்திற்கு மாறிவிடுவார்கள். யோகிகள் அதை சரிசெய்து விடுவார்கள்.

இல்லறத்தானுக்கு ஞானம் உண்டா என்றால், உண்டு. இல்லறத்தானுக்கு எப்பொழுது ஞானம் வரும். சுமார் பதினைந்து வருடம் பூஜை செய்தாலன்றி இவன் இந்த நிலைக்கு வர முடியாது. பத்து, பதினைந்து வருடம் பாடுபட்டால்தான் இந்தத் துறைக்கு வர முடியும்.

இந்த இடைப்பட்ட காலத்தில் துணையில்லையென்றால் மனம் செம்மைப்படாது. உடம்பில் விகாரம் ஏற்படும், தணிப்பதற்கு துணை வேண்டும். அதற்காக தினமும் பூஜை செய்து வர வேண்டும். அதற்கு பிறகுதான் ரகசியங்கள் புலப்படும். இல்லையென்றால் புலப்படாது. ஆகவே இந்தத் துறையில் வருபவனுக்கு இதுதான் பயிற்சி. இதற்கு பிறகு மனைவிமக்களை விட்டுவிட்டு தனித்து வர வேண்டிய காலம் வரும். இந்தத் துறைக்கு இதுதான் அடிப்படை.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**
**போஒய்ப் பெறுவது எவன்?**

**– திருக்குறள் – இல்வாழ்க்கை – குறள் எண் 46.**

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை.**

**– திருக்குறள் – இல்வாழ்க்கை – குறள் எண் 47.**

**ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா; இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.**

**– திருக்குறள் – இல்வாழ்க்கை – குறள் எண் 48.**

இதை ஆராய்ந்து பார்க்கும்போது, சித்தனென்று சொல்லப்பட்டவன், தனித்த வாழ்க்கையை நடத்த முடியாது. அப்படி நடத்துகிறான் என்று சொன்னால், முன் ஜென்மத்தில் அவன் யோகியாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இவன் தேகமே இவனுக்கு இடையூறாய் இருக்கும். இந்தத் துறைக்கு இவன் தேகமே இவனுக்கு தடையாக இருக்கும். இந்தத் துறை மிகவும் நுட்பமான துறை.

சிலபேர் துறவைப் பற்றி பேசினாலும், அவனுக்கு இந்தத் துறையைப் பற்றி அனுபவம் இல்லை. இந்தத் துறையைப் பற்றிய அனுபவம் உள்ளவன், நிச்சயமாக ஆசான் திருவள்ளுவர் சொன்னது போல, இல்லறத்திலிருந்துதான் துறவறத்திற்கு வருவான். ஆசான் திருவள்ளுவர் இருபத்து நான்கு அதிகாரத்தில் இல்லறத்தைப் பற்றி சொல்லியுள்ளார். பதிமூன்று அதிகாரம்தான் துறவறத்திற்கு வைத்திருக்கிறார். இந்தத் துறைக்கு இப்படித்தான் வர வேண்டும் என்பதற்காகத்தான், இல்லறத்திற்கு இருபத்து நான்கு அதிகாரம் வகுத்து வைத்திருக்கிறார்.

சிலர் திருமணம் செய்யக் கூடாது என்பார்கள். அவர்களெல்லாம் தேகத்தைப் பற்றி அறியாதவர்கள். சில சங்கங்கள் கூட, இப்படி சொல்லும். இவர்களெல்லாம் இந்தத் துறையைப் பற்றி அறியாத மக்கள். தனித்த வாழ்க்கையை மேற்கொண்டால், பெண்ணுக்கோ, ஆணுக்கோ நித்தம் நித்தம் போராட்டம் நடந்து கொண்டே இருக்கும். உடம்பில் உள்ள காமவிகாரம் மனதை நச்சரித்துக் கொண்டே இருக்கும். தேகத்தில் ஏற்படுகின்ற விகாரம், மனதை கிளர்ச்சிப்படுத்திக் கொண்டே இருக்கும். மனதை கட்டுப்படுத்திக் கொண்டிருக்க மட்டுமே நேரம் இருக்குமே தவிர, பூஜை செய்ய விடாது.

மனம் செம்மைப்பட வேண்டுமென்றால், துறவைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். மனதில்தான் துறவு இருக்க வேண்டுமே தவிர, மனைவிமக்களை விட்டுவிட்டு இருப்பது துறவு அல்ல.

சார்ந்தும், சாராது இருப்பது எப்படியென்றால், பிள்ளைப்பூச்சி சேற்றில் இருந்தாலும், சேறு ஒட்டாது. தாமரை தண்ணீரிலேயே இருக்கும், ஆனால் தண்ணீர் தாமரை இலையில் ஒட்டாது. புளியம்பழத்தின் ஓடு தனியாக, புளி தனியாக இருக்கும். இந்தத் துறைக்கு வர ஆசைப்படுகின்றவன், இல்லறத்தில் இருந்தாலும் மனம் முழுவதும் தனித்தே இருக்க வேண்டும். இப்படியெல்லாம் இருந்து வர வேண்டிய துறை இது.

சில சங்கங்கள் திருமணம் செய்யாமல் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறது. திருமணம் செய்யாதவன் வெளியில்தான் பேசிக்கொண்டிருக்கின்றானே தவிர, அவன் உடம்பு அவனை வஞ்சித்துக் கொண்டே இருக்கும். அது அவனுக்கே தெரியும். ஏனென்றால் உடற்கூறு தெரிந்தவனுக்கு மட்டும்தான் தெரியும்.

சுக்கிலம் என்று சொல்லப்பட்ட ரகசியத்தை அறியாமல், இந்தத் துறைக்கு வரமுடியாது என்று நாங்கள் மட்டும்தான் சொல்வோம். சுக்கிலத்தின் ரகசியத்தை அறிந்த மக்கள் நிச்சயமாக கூட்டு வாழ்க்கை நடத்துவார்கள். கூட்டு வாழ்க்கையின் மூலமாக மனம் அமைதி ஏற்படும். மனம் அமைதி ஏற்படுவதன் மூலமாகத்தான் பூஜை செய்ய முடியும். அந்த பூஜையும் சலிப்பு ஏற்படுமாறு செய்யக் கூடாது. தினமும் பூஜை செய்து அருளைப் பெற வேண்டும்.

இப்படியெல்லாம் சொல்பவன்தான், சூதத்தை கட்ட அறிவான். சூதம் என்று சொல்லப்பட்ட சுக்கிலத்தைப் பற்றிய ரகசியத்தை, அதைக் கட்டுகின்ற மார்க்கத்தை, அதைக் கட்டிய மக்கள்தான் அறிந்து சொல்ல முடியும்.

சுக்கிலத்தை கட்டியவன், மணியாக கூடியவன், மணியாக்கக் கூடியவன். சுக்கிலத்தைப் பற்றிய ரகசியத்தை அறிந்து அதை மணியாக்கியவன்தான் இந்த ரகசியத்தை சொல்ல முடியும். ஆசான் அகத்தீசருடைய பாதத்தைப் பற்றினால்தான், சுக்கிலத்தை கட்டக் கூடிய ரகசியத்தை அறிய முடியும்.

**தாளப்பா பூசைசெய்யக் கைலாசபோதம்**
**தப்பாமற் சதகோடி காலமாகும்**

என்று சொல்கிறார். ஆசான் அகத்தீசர் பாதம்தான் திருவடி. அதையே தாள் என்று சொல்கிறார். பூஜை செய்ய பூஜை செய்ய கைலாசபோதம் என்பதால், பூஜை செய்ய செய்ய, மேலான அறிவு வரும். அந்த மேலான அறிவைக் கொண்டுதான் இந்த உலகத்தைப் பார்க்க முடியும். சாதாரண அறிவு இந்த உலகத்தை ஆராய்ந்து கொண்டிருக்கும். மேலான அறிவு தன்னையே ஆராய்ந்து கொண்டிருக்கும்.

**தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை யறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே.**

**– திருமந்திரம் – அறிவுதயம் – கவி எண் 2355.**

தலைவன் தன்னுடன் இருக்கிறான் என்ற உணர்வு வந்தாலே, மேலான அறிவு வந்ததென்று அர்த்தம்.

**தாளப்பா பூசைசெய்யக் கைலாசபோதம்**
**தப்பாமற் சதகோடி காலமாகும்**

தப்பவே தப்பாது என்கிறார். தப்புதல் என்றால் தவறுதல் என்று பொருள்படும். தவறில்லாத ஞானவாழ்க்கை எது என்று கேட்டான்? தாள் என்பது ஞானிகளின் திருவடிதான். ஞானிகளின் பாதத்தைப் பற்றினால்தான் அவன் கல்வியறிவு உள்ளவன் என்று சொல்வார் ஆசான் திருவள்ளுவர்.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 2.**

ஒருவனை கற்றவன் என்று சொன்னாலே, அவனுக்கு ஞானிகளின் பாதத்தைப் பற்றி பூஜிப்பதற்குரிய அறிவு வர வேண்டும். ஞானிகளின் பாதத்தைப் பற்றி பூஜை செய்ய கல்வி இருக்குமேயானால், அவனையே கற்றவனாக ஆசான் திருவள்ளுவர் ஏற்றுக்கொள்கிறார். இல்லையென்றால் மற்ற கல்வி அறிவு உள்ளவனையெல்லாம் பார்த்து, நீ என்ன படித்து என்ன பயன் என்கிறார் ஆசான் திருவள்ளுவர்.

தூய அறிவு வடிவாகிய ஞானிகளின் பாதத்தை நீ பற்றாவிட்டால், நீ கற்ற கல்விக்கு பயனில்லை என்று சொன்னவர், ஆசான் திருவள்ளுவர்தான்.

**தாளப்பா பூசைசெய்யக் கைலாசபோதம் –** மகான் அகத்தீசர், மகான் திருமூலதேவர், மகான் கொங்கணமகரிஷி, மகான் புஜண்டமகரிஷி, மகான் போகமகாரிஷி போன்ற தூய அறிவுடைய ஞானிகளை பூஜை செய்ய வேண்டும். இவர்களெல்லாம் மிகப் பெரிய மகான்கள். இவர்கள் தூய அறிவே வடிவானவரை பூஜை செய்த மக்கள். இவர்களைத்தான் பூஜை செய்ய வேண்டும்.

வாலறிவு என்றால் தூய அறிவு வடிவானவன் என்று அர்த்தம். தூய அறிவு வடிவானவன் பாதத்தை பற்றுகின்ற மார்க்கத்தை, கற்றவன் சொல்ல வேண்டும். இல்லையென்றால் சூதம் என்று சொல்லப்பட்ட சுக்கிலத்தை கட்ட முடியாது.

சுக்கிலத்தை கட்டினால் நரகத்திற்குதான் போவான். சூதம் என்று சொல்லப்பட்ட சுக்கிலத்தை கட்டினால் நோய் வந்துவிடும். அதேநேரத்தில் இல்லறத்தில் அதிகமாக செலவழித்தாலும், நோய் வந்துவிடும். இதையே விந்து விட்டான், நொந்து கெட்டான் என்பார்கள். ஒரு மனிதனுக்கு மலஜலம் சரியாக கழியாவிட்டால், நோய் வந்துவிடும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சுக்கிலம் வெளியாகாமல் உடம்பிலேயே தங்கினால், தேகத்தில் கொழுப்பு அதிகமாகி நோய் வந்துவிடும்.

சிலருக்கு உடம்பில் பித்தம் அதிகமாகி, மலச்சிக்கல் உண்டாகி, கண்ணெரிச்சல் வரும். சுக்கிலத்தை கட்டுவது பல நோய்களுக்கு காரணமாகிவிடும். உடம்பில் இருக்கின்ற கழிவுப்பொருளாகிய சுக்கிலம் நீங்கினால் அன்றி, மனம் செம்மைப்படாது. இதற்கு இல்லறம் அவசியம்.

ரிஷிபண்டம் இரவு தங்காது என்று சொல்வார்கள். ரிஷி என்றால் யோகி. பண்டம் என்பது அவரது உடைமை. அது இரவு நேரம் தங்காது. அதற்கு யோகிகள்தான் அருள் செய்வார்கள். பழைய சுக்கிலமாகிய அழுக்குப்பொருள், கழிவுப்பொருள் நீங்க வேண்டும். சுத்த சுக்கிலம் வருவதற்கு பத்து, பதினைந்து, இருபது வருடங்கள் ஆகலாம். அதுவரையிலும் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

உடம்பில் மாசு இருந்தால், சுக்கிலத்தில் மாசு இருக்கும். உடம்பு மாசு நீங்கினாலன்றி சுக்கில மாசு நீங்காது. உடம்பு மாசு நீங்கும் வரையிலும், உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையை அறிந்தால் மட்டும் போதாது, உடம்பு மாசு நீங்க வேண்டும். உடம்பு மாசு நீங்கினால்தான், சுக்கிலம் சுத்தப்படும். சுக்கிலம் சுத்தப்பட்டால்தான் மணியாகும்.

**ஆச்சப்பா புலத்தியனே சூதங்கட்ட**
**ஆராலும் முடியாது அறிவான்சித்தன்**

சூதம் என்று சொல்லப்பட்டதை யாராலும் கட்ட முடியாது. யாராலும் கட்ட முடியாது என்று சொன்னாலே கவிஞன், எழுத்தாளன், பேச்சாளன் இன்னும் எவ்வளவு பெரிய கல்வியறிவு உள்ளவனாக இருந்தாலும் எத்தனை ஆற்றல் உள்ளவனாக இருந்தாலும் அவனால் கட்ட முடியாது. சித்தன்தான் கட்டுவான் என்று சொன்னார். அந்த சித்தன் யார்? ஆசான் அகத்தீசன் பாதத்தைப் பற்றினாலன்றி சித்தனாக முடியாது. ஆசான் அகத்தீசரை, வாலறிவன் என்று ஆசான் திருவள்ளுவர் சொன்னார். வாலறிவன் என்றால் தூய அறிவுடையவன் என்று அர்த்தம்.

இந்தத் துறையில் எந்த அளவிற்கு அறிவு மென்மையாகிக் கொண்டே இருக்கிறதோ, எந்த அளவிற்கு அறிவு தூய்மையாகிக் கொண்டே இருக்கிறதோ, அந்தளவிற்கு தூய்மை ஆகிறான் என்று அர்த்தம். தூய்மை ஆகஆக அவன் உண்மைப் பொருளை தெரிந்து கொண்டிருக்கிறான் என்று அர்த்தம். நமது அறிவு உலக்கை மழுங்கி இருப்பது போல், மழுங்கி இருக்கிறது. கூர்மையில்லாத அறிவாக மழுங்கிப் போயிருக்கிறது. நாம் கூர்மையில்லாத அறிவுள்ளவர்களாக இருக்கிறோம். நுணுக்கத்தில் நுணுக்கம், நுட்பத்தில் நுட்பமான, மென்மையான மிகக் கூர்மையான அறிவுள்ளவர்கள் ஞானிகள். அவர்களுடைய பாதத்தைப் பற்றினாலன்றி அறிய முடியாது.

சுக்கிலத்தை யாராலும் கட்ட முடியாது என்று சொன்ன அவரே முடியும் என்கிறார். முடியாது என்று சொன்னால், முடியக் கூடிய ஒன்று இருக்க வேண்டும் அல்லவா. ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றினால் முடியும் என்கிறார்.

**பேச்சப்பா அக்கினியிற் செயித்துதானாற்**
**பேரண்டங் கிழிந்தாடும் வேதையாகும்**

அக்கினி ஏறஏற, உடம்பில் இருக்கின்ற வாயுக்கள் எல்லாம் மாறுபட ஆரம்பித்துவிடும். வாயு மாறுபட்டதால், நாலாபக்கமும் வாயு சூழ்ந்து கொண்டு, சுக்கில வெப்பத்தால், முதுகில் வெப்பம் வரும், கைகால்கள் குடைய ஆரம்பிக்கும். பலவகையான துன்பங்கள் வரும். அதை ஜெயிக்க வேண்டும்.

நூல் எடுத்துப் பார்க்கும்போது, எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்று வரும். அவ்வளவையும் ஜெயிப்பது சின்ன விஷயமல்ல.

**பேரண்டங் கிழிந்தாடும் வேதையாகும்** – வேதை என்பது ஆகமம் என்று பொருள்படும், சாஸ்திரம் என்றும் பொருள்படும்.

**பேரண்டங் கிழிந்தாடும்** – இந்த உலகத்தையே இரண்டாக கிழிக்கிற அளவிற்கு ஆற்றல் வரும். இந்த உலகத்தையே துண்டுதுண்டாக ஆக்கலாம். அந்த அளவிற்கு ஆற்றலை தருகிறார்கள் ஞானிகள்.

**நீச்சப்பா யிதைக்கட்ட வகையைக்கேளு**
**நீதியெவர் களுங்கூட வரிதாமப்பா**
**ஏச்சப்பா யிதனுடைய வர்மம்சொல்வேன்**
**யெந்தனுக்குப் பரையீசன் இதைத்தந்தானே.**

பரையீசன் என்று சொல்லப்பட்ட ஆதி தலைவன் இதை தந்தான் என்று சொல்கிறார்.

**தானென்ற புலத்தியனே வகையைக்கேளு**
**தயங்காமற் சொல்லுகிறேன் வகைதானப்பா**
**கோனென்ற அழலாடி யெனக்குச்சொன்னார்**
**குறிப்பாக மனந்தேறிக் கூறிச்சென்றேன்**
**ஏனென்றால் புலத்தியனே உனக்குயானும்**
**இன்பமுடன் சொல்லிவிட்டேன் கருத்தானப்பா**
**ஊனென்ற சூதமொன்று வெள்ளையொன்று**
**உத்தமணிச் சாரதனா லிதனையாட்டே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 3.**

எளிமையாக எல்லா கருத்துகளையும் சொல்லக் கூடாது என்பதற்காக சில கவிகளில் மறைத்து சொல்கிறார். இருந்தாலும் அவருடைய விளக்கம் அனைத்தும் சூதம் கட்டுவதற்கும், தாள் பூஜை செய்வதற்கும் சொல்லியிருக்கிறார். சில கருத்துகளை வைத்தியத்திற்கும் சொல்லியிருக்கிறார்.

சூதம் கட்டுவது என்பதை, பாதரசத்தை கட்டுவதாக சிலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சுக்கிலமாகிய ரசத்தை கட்டுகின்ற மார்க்கத்தைப் பற்றி

சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவனுடைய பார்வைக்கு பாதரசம்தான் சூதம் என்று தெரிகிறது. ரசத்தை மூலிகை மூலமாகவும் கட்டலாம். மூலிகை மூலமாக கட்டுவதற்கு விளக்கம் சொல்லுகிறார். ஆனால் அதுவல்ல. அதைக் கட்டிவிட்டு ரசமணி செய்து விட்டேன் என்பான். ரசத்தை மணியாக்குவது என்பது, இந்த மணி அல்ல. இந்த மணி செய்தால் எந்த மனிதனுக்கும் ஞானத்தை தந்துவிடாது. வாழ்க்கையில் எந்தவித மாற்றமும் இருக்காது.

ரசம் என்கிற வார்த்தையே சுக்கிலம்தான். அதை சிவனார் அமிர்தம் என்று சொல்வார்கள். ஒரு மனிதன் கட்ட வேண்டியது அதைதான். சிலபேர் மூலிகையால் ரசத்தை மணியாக்குவான். இதற்கு காரணம் அவன் உண்மையான ரசத்தை அறியவில்லை. சூதம் என்கிற ரசத்தை கட்டுவதற்குரிய விளக்கத்தை சொல்கிறார்.

இந்தத் தத்துவங்கள் அனைத்தும் சுமார் ஆயிரம் ஆண்டுகளாகவே புதைபொருள் போல் மறைபட்டுவிட்டது. இந்தத் தத்துவத்தை மகான் இராமலிங்கசுவாமிகள் ஓரளவிற்கு சொன்னார். அதன்பிறகு நாம்தான் இந்தத் தத்துவத்தை உலக மக்களுக்கு பரவ வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் சொல்கிறோம்.

இந்தத் தத்துவத்தை தொடர்ந்து பேச வேண்டுமென்று கட்டளை வந்துள்ளதால், நாம் தொடர்ந்து இதைப் பற்றி பேச இருக்கிறோம். வருங்காலம் ஞானசித்தர் காலம் என்பதாலே, இந்தத் தத்துவம் இந்த உலகம் முழுவதும் பரவ வேண்டும்.

**ஆட்டப்பா கருவினுட மத்தஞ்சாத்தில்**
**அதுவிரண்டு கடிகைபட ஆட்டிக்கொண்டு**
**நீட்டப்பா ரவியினுட கிண்ணிதானும்**
**நிலைக்கவே நாலுவிர லங்குலத்தால்**
**மூட்டப்பா ஓட்டிவிட்டுச் சீலைசெய்து**
**மூதண்டக் குக்குடத்திற் புடத்தைப்போடு**
**கோட்டப்பா மேலேறிப் பதங்கங்காணும்**
**குமுறவழி காரமிட்டு வுருக்கிக்கொள்ளே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 4.**

**ஆட்டப்பா கருவினுட மத்தஞ்சாத்தில்** – மத்தஞ்சாத்தில் என்றால் ஊமத்தஞ்சாறு ஆகும். ஊமத்தம் சாறில் செய்ய வேண்டும் என்கிறார்.

ஆரம்பத்தில் யோகிகளுக்கு மட்டும் இது புரியும். சூதம் கட்டுகின்ற முறை அக்கினியால்தான் ஆகும் என்று சொன்னார். இதன் அடுத்த பகுதியாகிய வைத்தியத்தைப் பற்றி நூல் பார்க்கும்போது, இன்னின்ன முறையில் செய்தால் சூதத்தை கட்டலாம் என்று அதற்கு விளக்கம் தருகிறார்.

முதலில் சொன்னது அனைத்தும், யோகிகளுக்கு மட்டும்தான் தெரியும். ஆனால் வைத்தியனுக்கு இது தெரியாது. சூதம் என்று சொல்லப்பட்ட ரசத்தை கட்டுகின்ற மார்க்கத்தைப் பற்றி சொல்கிறார். ஆனால் இந்த ரசத்தைப் பற்றி சொல்லவில்லை. அவர் அந்த ரசத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார். மேலான ரசமாகிய ஆதிவிந்துவைப் பற்றி சொல்லியிருக்கிறார்.

**கொள்ளப்பா மணியதுபோ லுருகியாடும்**
**குருமுகம்போ லொளிவுமிடுங் கறுப்பதாகும்**
**மெள்ளப்பா அதினுடைய வேதைமார்க்கம்**
**வெட்டவெளி குருடனுக்கு மெய்க்கோலப்பா**
**உள்ளப்பா கொண்டுஜீவ னங்கள்செய்வர்**
**உலகத்துள் நரகத்தே கிடந்துமாய்வர்**
**தள்ளப்பா யிதுவல்ல காயசித்தி**
**தாண்டவமே புரிவதற்குப் பூசைபண்ணே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 5.**

புறத்தே சூதம் என்ற பாதரசத்தை கட்டுகின்ற மார்க்கத்தை சொல்லிவிட்டார். இது வயிற்றுப்பிழைப்புக்கு ஆகுமே தவிர, இதனால் அவனுக்கு ஞானம் வந்துவிடாது. அவர் சொன்னது இந்த ரசத்தை அல்ல.

நாங்கள் சொன்னது **நாதவிந்து கலாதி நமோநம** என்பதாகும். ஆதி சுக்கிலமாகிய உலக உயிர்கள் தோன்றுவதற்கு காரணமாகியதை ஆசான் சொல்கிறார்.

**அகரந்தான் பரவெளியி லொளிவுண்டாச்சு**
**அதில்நின்றே காற்றுடனே நெருப்புண்டாச்சு**
**இகரந்தான் தண்ணீர்மண் ரெண்டதாச்சு**
**இதில்நின்றே ஜீவாத்மா தோன்றலாச்சு**
**உகரந்தான் பூமிபரு வதமாச்சு**
**உகந்ததொரு நான்குவித யோனியாச்சு**
**ஒகரசுழி வட்டமெழு தோற்றமாச்சு**
**உண்மைபரா பரத்தினுட செயல்தானாதி.**

**– சுப்பிரமணியர் ஞானசைதன்யம் 108 – கவி எண் 83.**

ஆரம்பத்தில் ஏற்பட்ட ஒளிப்பிழம்பால் உயிரினங்கள் தோன்றியது என்பதை பல முறை சொல்லியிருக்கிறோம்.

ஞானிகளுடைய சூதம் கட்டும் முறை என்பது, உடம்பிற்குள்ளே உள்ள வித்தாகிய சுக்கிலத்தை கெட்டிப்படுத்திக் கொள்வதுதான். இதுதான் யோகிகளின் முதல் கடமையாக இருக்கும். இதை இரண்டு வகையாக பிரித்துப் பார்க்கும்போது, ஒன்று பாதரசத்தை கட்டுகின்றவன் வைத்தியனாகவும், அது

உலக மக்களை ஏமாற்றுவதற்காகவும், வயிற்றுப்பிழைப்பிற்காகவும் செய்யக் கூடிய அராஜக செயல் இது. ஆனால் அந்த அராஜக செயலை யோகிகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் யோகி என்பவன் ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றி தனது தேவையை பூர்த்தி செய்து கொள்வான்.

போகி என்பவன், உலக நடையில் இருப்பான், பாதரசத்தை கட்டி வயிற்றுப்பிழைப்பு நடத்திக் கொள்வான். இவர்களுக்கும் அவனுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், இவர்கள் முழுமையான சிறப்பறிவு உள்ள மக்கள், அவன் சுத்த மூடனாக இருப்பான். அந்தத் துறையில் அவனுக்கு அறிவிருக்கலாம், அது அநித்தியத்தை பற்றியது. இந்தத் துறை நித்தியத்தை பற்றியது. சூதத்தைப் பற்றி அறிந்தால் நித்தியத்தை பற்றி அறிந்தான் என்று பொருள்.

சூதம் என்று சொல்லப்பட்ட சுக்கிலத்தை அவன் அறிந்தால் அவன் நித்திய வாழ்க்கையை வாழ்கிறான். பாதரசத்தை அறிந்தால் அவன் அநித்திய வாழ்க்கையை வாழ்கிறான் என்று அர்த்தம். பாதரசம் கட்டுவது அநித்திய வாழ்க்கைக்கு பயன்படுமே தவிர, நித்திய வாழ்க்கைக்கு பயன்படாது. நாங்கள் சொன்ன முதல் இரண்டு கவிகளும்தான் காயசித்திக்கு உண்டான முறை.

**தள்ளப்பா யிதுவல்ல காயசித்தி**
**தாண்டவமே புரிவதற்குப் பூசைபண்ணே.**

இதெல்லாம் காயசித்திக்கு அல்ல. மூன்றாவது கவியில் சூதம் கட்டுகின்ற மார்க்கத்திற்கு இன்னின்ன மருந்துகள் சேர்த்தால் பாதரசத்தை கட்டலாம் என்று சொல்லிவிட்டேன். **தள்ளப்பா யிதுவல்ல காயசித்தி** – இது அல்ல காயசித்தி முறை. இதை தள்ள சொன்னதன் நோக்கம், இது காயசித்திக்கு பயன்படாது.

காயம் என்றால் உடம்பு. காயசித்தி பெற சுக்கிலத்தை கட்ட வேண்டும். சுக்கிலத்தை கட்டிவிட்டாலே காயசித்தி ஆகிவிட்டது என்று பொருள்படும். அதுதான் பிறவிப்பிணிக்கு மருந்தாக இருக்க முடியும்.

இந்த உடம்பிற்குள் இருக்கக் கூடிய, கழிவுப்பொருளாகிய, துர்நாற்றத்தை உண்டாக்கக் கூடிய, மீண்டும் பிறவிக்கு காரணமாகிய சுக்கிலத்தை கட்டினால் அது காயசித்தி ஆகும். காயசித்தி என்பது சுக்கிலத்தை கட்டுவதுதான். சுக்கிலத்தை கட்டாவிட்டால் காயசித்தியை பெற முடியாது, நரை திரை வந்துவிடும்.

உடம்பில் தங்கிய சுக்கிலம் நாளுக்குநாள் வெப்பத்தை உண்டாக்கி, உடம்பின் நரைதிரை நீக்கி நாடிநரம்புகளுக்கு வலுவை உண்டாக்கும்.

**தள்ளப்பா யிதுவல்ல காயசித்தி**
**தாண்டவமே புரிவதற்குப் பூசைபண்ணே.**

பாதரசம் கட்டுவது வயிற்றுப் பிழைப்புக்கு ஆகுமே தவிர, இது காயசித்திக்கு ஆகாது. **தாண்டவமே புரிவதற்கு பூஜை செய்** என்கிறார்.

கட்ட முடியாத சுக்கிலத்தை கட்டுவதற்கு, **தாளப்பா பூசைசெய்யக் கைலாசபோதம்** என்கிறார். இங்கே **தாண்டவமே புரிவதற்கு பூசைபண்ணு** என்கிறார். பூஜை செய்தாலன்றி தாண்டவம் என்று சொல்லப்பட்ட சித்து விளையாட முடியாது.

**பாரி லுயர்ந்தது பத்தி – அதைப்**
**பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி**
**சீரி லுயரட்ட சித்தி – யார்க்குஞ்**
**சித்திக்கு மேசிவன் செயலினால் பத்தி.**

**– மகான் கடுவெளிச்சித்தர்.**

பூஜை என்பது என்ன? எதைப் பற்றி பூஜை செய்வது? நித்தியத்தைப் பற்றி பூஜை செய்வதா? அநித்தியத்தைப் பற்றி பூஜை செய்வதா? என்றால் பூஜை இரண்டு வகை உண்டு. போக வாழ்க்கை, யோக வாழ்க்கை என இரண்டு வகை உண்டு. போக வாழ்க்கை என்பது குறுகின வாழ்க்கை. உலகமக்கள் போல் உண்டு உடுத்தி, பெருமையாக வாழ்வதற்கும், பொருள் திரட்டுவதற்கும் பூஜை செய்யும் முறை ஒன்று இருக்கிறது. இதையெல்லாம் அநித்தியம் என்று எண்ண வேண்டும். நித்திய வாழ்க்கைக்கு பூஜை ஒன்று இருக்கிறது.

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றுஅது**
**வேண்டாமை வேண்ட வரும்.**

**– திருக்குறள் – அவா அறுத்தல் – குறள் எண் 362.**

உலக வாழ்க்கையை செம்மையாக நடத்துவதற்கு பூஜை ஒன்று இருக்கிறது. அடுத்தது, உலக வாழ்க்கை அநித்தியமானது, நிலையில்லாதது என்றும் உணர்ந்து, நித்தியமான என்றும் அழிவில்லாத வாழ்க்கையை மேற்கொள்வதற்கு பூஜை முறை ஒன்று இருக்கிறது.

உலக மக்கள் தன்னுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்காக பூஜை செய்கிறான். ஆனால் யோகி இதெல்லாம் அநித்தியமானது என்பதை அறிந்து, நித்தியமான ஒன்றை அடைய வேண்டுமென்று பூஜை செய்கின்றான்.

இரண்டு வகை பூஜை இருக்கிறது. தாண்டவமாடுவதற்கு பூஜை செய் என்கிறார். தாண்டவமாடுதல் என்பதற்கு தில்லை நடராஜர் போல் ஆவதற்கு என்று பொருள்படும். மனிதன் தில்லை நடராஜ பெருமானாகலாம். மகான் அகத்தியர் பாதத்தைப் பற்றி பூஜை செய்தால், தில்லை நடராஜ பெருமானாகலாம்.

ஏனென்றால் தில்லை நடராஜ பெருமானும், தெட்சணாமூர்த்தியும் ஒன்று. தில்லை நடராஜ பெருமானும், சுப்பிரமணியரும் ஒன்று. தில்லை நடராஜ பெருமானும், மகான் அகத்தியரும் ஒன்று. ஆகவே இவர் வேறு அவர் வேறல்ல.

**குருவே சிவமெனக் கூறினன் நந்தி**
**குருவே சிவமென் பதுகுறித் தோரார்**
**குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்**
**குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.**

**– திருமந்திரம் – சிவகுரு தரிசனம் – கவி எண் 1581.**

**சிவனே சிவஞானி யாதலாற் சுத்த**
**சிவனே எனஅடி சேரவல் லார்க்கு**
**நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்**
**பவமான தின்றிப் பரலோக மாமே.**

**– திருமந்திரம் – சிவகுரு தரிசனம் – கவி எண் 1580.**

சிவன் யாரென்றால், அவன் சிவஞானி என்று சொல்கிறார். யாருடைய அறிவு மிகுதி பெறுகிறதோ, முற்றுப் பெறுகிறதோ, தெளிவு பெறுகிறதோ, திண்மை பெறுகிறதோ, நன்மை பெறுகிறதோ அவன்தான் சிவனாக முடியும். ஆகவே தீட்சண்யமான அறிவுள்ள மக்கள்தான் இந்தத் துறைக்கு வர முடியும்.

தீட்சண்யமான அறிவை பெறுவதற்கு திருவடியை பூஜை செய்கிறான். முற்றுப் பெற்றவன், முதுமையான அறிவுள்ளவன், தெளிவான அறிவுள்ளவன், கனிவான உள்ளம் படைத்தவன் திருவடியை பூஜை செய்தால், தாண்டவத்தை பெறுவதற்கு உற்ற துணையாக இருக்கும்.

**பண்ணப்பா வோராண்டு செய்தாயானால்**
**பராபரமே வுனக்குவந்து யேவல்செய்யும்**
**விண்ணப்பா வொருவருக்கும் மணிசொல்லாதே**
**வேதாந்த நரகத்தே கிடந்துமாய்வார்**
**கண்ணப்பா உனக்கேத்த பிள்ளையானால்**
**கைமுறையாய்ச் செய்துஅவன் குணத்தைப்பாரு**
**ஒண்ணப்பா கருவைத்தா னொளிக்கவில்லை**
**உற்றுணர்ந்து மனந்தேறிப் பாருபாரே.**

**– தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10 – கவி எண் 6.**

**பண்ணப்பா வோராண்டு செய்தாயானால்** – பூஜை செய்ய வேண்டுமென்று சொல்கிறார். இந்தத் துறையில் வருகின்ற மக்கள், யோகம் செய்து வந்திருக்கிறார்களா? பூஜை செய்து வந்திருக்கிறார்களா? என்றால் யோகம் என்பது ஒரு நொடியில் செய்யக் கூடியது. ஆனால் பூஜை என்பது பல ஆண்டுகள் செய்யக் கூடியது.

பல ஆண்டுகள் உள்ளம் உருக பூஜித்து, பெற்ற பயனால் ஒரு நொடிப் பொழுதில் ஆசானால் நடத்தப்படுவதை யோகம் என்று சொல்வார். பல ஆண்டுகள் உள்ளம் உருக பூஜித்த காரணத்தினால், மனம் விட்டு அழுது புலம்பி உள்ளம் உருக பூஜிக்க வேண்டும். தினம்தினம் இதே வேலையாக இருக்க வேண்டும்.

தொடர்ந்து பூஜை செய்த பலன், பல ஜென்மத்தில் பூஜை செய்த பலன், என்ன துன்பம் வந்தாலும் முன் வைத்த காலை பின் வைக்காமல் பூஜை செய்த பலன், பல ஆண்டுகள் பூஜை செய்த பலன், பக்தி விசுவாசத்தோடு உள்ளம் உருக பூஜித்த காரணத்தினால் வந்த பலனால், நொடிப்பொழுதிலே ஆசான் வாசி நடத்துவார். ஆகவே யோகம் என்பது நொடிப்பொழுது. பக்தி என்பது பல ஜென்மம். அது பல லட்சம் அல்லது பல ஆயிரம் ஜென்மமாக இருக்கலாம்.

ஆகவே பூஜை என்பது நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பதே முக்கால் சதம் ஆகும். ஆகவே மிகுதியாக இருக்க வேண்டியது பக்தி என்றும், யோகம் என்பது ஒரு நொடிப்பொழுதாக இருக்கக் கூடியது. ஆகவே இந்த யோகத்தை யார் செய்வது? சாட்சாத் பரப்பிரம்ம சொரூபமாக இருக்கக் கூடிய ஆசான் அகத்தீசர்தான் இந்த யோகத்தை நடத்தித் தர வேண்டும்.

சமுதாயத்தை வஞ்சிக்கக் கூடிய மக்கள்தான் யோகத்தைப் பற்றி பேசுவார்கள். மூச்சுக்காற்றைப் பற்றி பேசுகின்ற மக்கள் அத்தனைபேரும் சமூக விரோதிகள், ஆன்மீக விரோதிகள், அவர்கள் சமூகத்திற்கு கெடுதல் செய்யக் கூடியவர்கள், பலகீனமான அறிவுள்ள மக்கள். இவர்களால் சமுதாயத்தில் பல்வேறு மக்கள் நோய்வாய்ப்பட்டு அல்லல்பட்டு தடுமாறி இறப்பார்கள். யோகத்தின் தாத்பரியம், பாரம்பரியம், பண்பை அறியாதவர்களாக இவர்கள் இருப்பார்கள்.

இடது பக்கம் வாசியை இழுங்கள், வலது பக்கம் வாசியை இழுங்கள், வாசியை கட்டுங்கள் என்று சொல்வான். கௌரவமாக வாழ்ந்து ஆசானாக இருக்க வேண்டுமென்று, இவன் யோகத்தை சமுதாயத்திற்கு கற்றுக் கொடுப்பான். இதனால் வெகுபேர் குடல்புண் வந்து கைகால் வீங்கி, மூளைக்கோளாறு ஏற்பட்டு நோய் வந்து அல்லற்பட்டு இடையில் செத்துப் போகிறான். சில பேர் நாக்கை உள்ளே இழுத்து பயிற்சி செய்வான். இதனால் இடையிடையே பலபேர் வயிறு வீங்கி, கால் வீங்கி, கபாலம் வெடித்து செத்தவர்கள் வெகுபேர்.

யோகநெறியின் தாத்பரியம், ஞானநெறியின் தாத்பரியம் அறியாது பண்பறியாத மக்கள் தவறான வழிகளை சமுதாயத்திற்கு காட்டுகிறார்கள். யோகத்தைப் பற்றி மட்டும் சொல்லியுள்ள நூல்களை படித்து, தவறாக யோகம் செய்து வெகுபேர் செத்துப்போனார்கள்.

பக்தி நெறியைப் போதிக்காமல், உண்மைப் பொருளை போதிக்காமல், யோகத்தை மட்டும் பற்றி பேசுவான். அதனால் இறந்தவர்கள் கோடானுகோடி பேர். இன்னும் எத்தனையோ பேர் சாகப்போகிறார்கள்.

பக்தி நெறியை போதிக்க மாட்டான், ஞானிகள் பாதத்தை பற்றிதான் நீங்கள் முன்னேற வேண்டுமென்று சொல்லித் தராமல், வெறும் யோகத்தை பற்றி நூல் எழுதியிருப்பான். வெகுபேர் இதைப் படித்து இறந்து போவான்.

இதை எழுதியவன் கதி என்ன என்றான்? நூலை எழுதியவன் பல ஜென்மங்களில் இழிபிறவி எடுத்து அல்லற்படுவான் என்கிறார். தொழுநோயாலும், காசநோயாலும், புற்றுநோயாலும் பீடிக்கப்பட்டு பல்வேறு ஜென்மங்களில் பல வகைகளில் துன்பப்படுவான். இப்படி கொடிய பிறவிகள் அவனுக்கு அமையும். கடைசியில் மலத்தில் நெளியும் புழுவாகவும், கிருமியாகவும் பிறப்பான்.

ஞானியாக வேண்டுமென்றால், பிறவித் துன்பத்தை ஒழிக்க வேண்டுமென்றால், நரைதிரையை வெல்ல வேண்டுமென்றால், காமவிகாரத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், யான் என்ற கர்வத்திலிருந்து விடுபட வேண்டுமென்றால், மென்மையான அறிவோடு வாழ வேண்டுமென்றால், பல கோடி ஆண்டுகளை நொடிப்பொழுதாக வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டால், சாட்சாத் பரப்பிரம்ம சொரூபமாகிய கருணையே வடிவாகிய ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றுங்கள். இப்படி திருவடியைப் பற்றி பூஜை செய்து ஆசான் அகத்தீசர் அருளைப் பெற்று அதன்பிறகு வாசிப் பயிற்சியாகிய யோகத்தை மேற்கொள்ளுங்கள் என்று சொல்ல வேண்டும். இப்படி சொல்பவனே இந்த சமுதாயத்தின் மீது கருணை உள்ளவன். அவனுடைய சொல், இந்த நாடு ஞான வாழ்வு பெற உற்ற துணையாக இருக்கும். இப்போது நாங்கள் பேசும்பொழுது எங்களது உள்ளும் புறமும் ஆசான் அகத்தீசர் இருந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

இப்படி சொல்லாமல் வெறும் யோகத்தைப் பற்றி மட்டும் சொன்னால் பலகோடி ஜென்மங்கள் இழிபிறவி எடுத்து அல்லற்படுவான். கொடியவனாகிய வஞ்சகன்தான், இந்தத் துறையைப் பயன்படுத்தி பொதுமக்களிடம் பொருளாதாரத்தை கவருவான்.

இந்தத் துறைக்கு வருகின்ற மக்கள், இகழ்ந்து பேசாது மௌனமாக இருப்பது நல்லது. இகழ்ந்து பேசுகிறவர்கள், ஞானிகளின் கொடுஞ்சாபத்திற்கு உள்ளாவார்கள்.

**பண்ணப்பா வோராண்டு செய்தாயானால்**
**பராபரமே வுனக்குவந்து யேவல்செய்யும்**

வெறும் பொங்கல் புளியோதரை வைத்து செய்வதெல்லாம் பூஜை அல்ல, ஆடு மாடு பலியிட்டு செய்வது பூஜை அல்ல. புறச்சடங்குகள் செய்வதெல்லாம் பூஜை அல்ல.

பூஜை என்ற சொல்லே, ஞானிகளின் திருவடிகளைப் பற்றுவதைதான் குறிக்கும். ஓராண்டு என்றால் ஞானிகளுக்கு அது பன்னிரண்டு வருடமாகும். பன்னிரண்டு ஆண்டுகள் ஞானவாழ்க்கையை ஓராண்டு என்று நூல்கள் சொல்லும். ஆகவே பன்னிரண்டு ஆண்டுகள் பூஜை செய்தால், பராபரமே அவனுக்கு ஏவல் செய்யும் என்பதுதான் இதன் சாரம்.

**விண்ணப்பா வொருவருக்கும் மணிசொல்லாதே** – விண் என்றால் ஆகாயம் என்று அர்த்தம். மணி என்று சொல்லப்பட்ட சுக்கிலத்தை பற்றி பேசக் கூடாது என்ற மரபு உள்ளது. ஆனாலும் இதை இகழ்ந்து பேசக்கூடிய மக்களிடம் இதை சொல்லி, அவனுக்கு சாபத்தை வாங்கி கொடுத்து விடக் கூடாது. யாருக்கு இதைப் பற்றி சொல்ல வேண்டும்? முதலில் அவனுக்கு ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்றி பூஜை செய்ய சொல்லிக் கொடுக்க வேண்டும். சுக்கிலத்தை மணியாக்கிய, மணியாக்கக் கூடிய, மணியான சித்தன், மணிமணியான சித்தன் ஆசான் அகத்தீசர் பாதத்தைப் பற்ற சொல்லிக் கொடுக்க வேண்டும். இப்படி போதிக்க வேண்டிய ரகசியத்தை, சாதாரண புல்லறிவாளனிடம் சொன்னால், அவன் இகழ்ந்து பேசி சாபம் வாங்கிக் கொள்வான். அதற்கு நீ காரணமாக ஆகாதே என்பார்.

**விண்ணப்பா வொருவருக்கும் மணிசொல்லாதே**
**வேதாந்த நரகத்தே கிடந்துமாய்வார்**

இப்படி சொன்னால் **வேதாந்த நரகத்தே கிடந்து மாய்வார்** என்று சொல்கிறார். பொருளறியாத மூடன், சாமியார் போன்று தாடி வளர்த்து, காவி உடை அணிந்திருப்பான். ஆனால் அவனை சூழ்ந்து கொண்டிருக்கும் மக்கள், இவனை ஒரு பெரிய மகான் என்றும், இவருடன் இருந்தால் பிறவித் துன்பத்தை ஒழித்துக் கொள்ளலாம், மேலான வாழ்க்கைக்கு வழிகாட்டுவான் என்றும் எண்ணிக் கொண்டிருப்பான். ஒரு சாதாரண இல்லறத்தான் மனைவி மக்களை விட்டுவிட்டு இவனிடம் தொண்டு செய்வான். அவனுக்கும் உண்மைப் பொருள் தெரியாது, வந்து சேர்கின்றவனுக்கும் உண்மைப் பொருள் தெரியாது. இப்படி இருவரும் சேர்ந்து ஆன்மீகத் துறையை மாசுபடுத்திவிடுவார்கள்.

ஆசான் அகத்தீசர், மகான் திருமூலதேவர், மகான் போகமகாரிஷி, மகான் புஜண்டமகரிஷி, மகான் கொங்கணமகரிஷி போன்ற மாபெரும் யோகிகள் பாதத்தைப் பற்றுங்கள், பிறகுதான் ஞானவாழ்க்கை கைகூடும் என்று சொல்ல வேண்டும். இப்படி சொல்லாமல் வேறு வகையான கதைகளை சொல்லுகின்ற மக்களிடம், இதை சொன்னால் என்ன ஆகும்?

வாசி என்று சொல்லப்பட்ட பிராணாயாமத்தில் ஈடுபடுவது எப்படி இருக்கிறதென்றால், வெறும் கையோடு வியாபாரம் செய்ய முற்பட்டால் லாபம் ஈட்ட முடியாதது போன்று இருக்கும். மாபெரும் யோகி ஆசான் அகத்தீசர் திருவடியைப் பற்றி, அவருடைய அருளைப் பூரணமாக பெற்று, அந்த மூலதனத்தைக் கொண்டு செய்வதுதான் யோகம். வெறும் யோகத்தை சொல்லிக் கொடுத்தால், அவன் **வேதாந்த நரகத்தே கிடந்துமாய்வார்** என்று சொல்கிறார். அவனுடைய வாழ்வு வீணாக போகும். இந்தத் துறையில் வருகின்ற மக்கள் கருணை கொண்டு சொல்ல வேண்டும், பக்தி நெறியைப் போதித்து அதன் மூலமாக யோகநெறியை சொல்ல வேண்டும்.

**பக்தி என்பது கோடி பங்கு, வாசி என்பது ஒரு பங்கு. பிராணாயாமம் என்பது ஒரு சதம், பக்தி என்பது ஒரு கோடி சதம். ஒரு கோடி மதிப்புள்ள பக்தியை செய்து, ஒரு சதமாகிய வாசியை நடத்திக் கொள்ள வேண்டும்.** ஒரு கோடி பங்கு பிராணாயாமம் என்று சொல்லப்பட்ட பாதையைக் காட்டி, ஒரு சதம் பக்தியைக் காட்டினால் அதன் விளைவு, வெகு பேர் நரகத்தில் கிடந்து மாய்வார்கள் என்பது இதன் சாரம்.

தெட்சணாமூர்த்தி ஞான பூஜாவிதி 10ல் உள்ள கருத்துக்களைப் பற்றி இப்பொழுது பேசியிருக்கிறோம். பூஜை என்று சொல்லாமல் ஞான பூஜாவிதி என்கிறார். ஞானம் பெறுவதற்கு பத்து பாடல்களில் வழி வகுத்திருக்கிறார். பத்து பாடல் மிக உயர்ந்த பாடல். தென்மண்டல தளபதியாகிய, தெட்சணாமூர்த்தியாகிய, பிறவிப்பிணிக்கு மருந்தாகிய மாமேருவாகிய ஆசான் அகத்தீசர் சொன்ன அந்தக் கருத்தை இப்பொழுது பேசியிருக்கிறோம். கால சூழ்நிலையை கருதி, இதே கருத்தை நாளை தொடர்ந்து பேசலாம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு
**R.சுரேஷ்** – 94434 21935

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஆனி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, ஆனி மாதம் 2ஆம் தேதி,**

**17.06.2019 - திங்கட்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஆனி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, ஆனி மாதம் 31ஆம் தேதி,**

**16.07.2019 - செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.




பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர், திரு. சி.மணிகண்டன் அவர்கள் ஓங்காரக்குடிலாசானின் அருளால் பெற்ற அனுபவங்கள் குறித்து. . .

அன்புள்ள ஞானத்திருவடி வாசகர்களுக்கு வணக்கம்.

சிவராஜயோகி, முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் திருவடிகள் போற்றி போற்றி போற்றி

கிருதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என யுகங்களை நான்காக வகைப்படுத்தியுள்ளனர். நாம் இந்த கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு யுகத்திற்கும் மோட்சத்திற்கு ஒவ்வொரு வழிகள் உண்டு. இந்த கலியுகத்தில் மோட்சத்திற்கான வழி நாமஜெபம் மட்டும்தான்.

ஒவ்வொரு துறைக்கும் குரு வேண்டும். குரு இல்லா வித்தை குருட்டு வித்தை என்பார்கள். எந்த துறையாக இருந்தாலும் குருவின் துணை வேண்டும். எவ்வளவு விஷயம் தெரிந்திருந்தாலும் குரு மூலமாக தெரிய வரும்போது, அதனுடைய மகிமை அளவில்லாததாக இருக்கும்.

இதை ஓங்காரக்குடிலாசான் குருநாதர் ஆறுமுக அரங்கமகாதேசிக சுவாமிகள் மூலமாக நான் உணர்ந்திருக்கிறேன். அதுவும் இந்த ஆன்மீகத் துறைக்கு கண்டிப்பாக குருவின் அருள் வேண்டும்.

துறையூர் ஓங்காரக்குடிலில் முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளை வணங்கி ஆசி பெற்ற நாள் முதல் என்னை நான் உணரத் தொடங்கினேன். குருநாதர் சித்தர்கள் நாமஜெபத்தை சொல்ல சொன்னார்கள். குருநாதர் மூலமாக பெற்ற இந்த உபதேசத்தால், நாமஜெபத்தின் மகிமையை முழுமையாக உணர்ந்து தினந்தோறும் விடாமல் நாமஜெபம் செய்து வருகிறேன்.

இந்த கலியுகத்தில் உயிர் அன்னத்தைப் பற்றியுள்ளது. ஆகவே அன்னதானத்தின் சிறப்பு அளவில்லாதது. ஓங்காரக்குடிலில் நடைபெறும்

அன்னதானத்தை கண்டு வியந்தேன். ஓங்காரக்குடிலில் தொண்டர்கள் அன்போடு மக்களை வரவேற்று, சுகாதாரமான சுவையான உணவை வழங்கும் முறையை பார்த்து பிரம்மித்து போனேன். அன்னதானத்தில் உணவை உண்டு மகிழ்ந்தேன். பலகோடி ஜென்மங்கள் புண்ணியம் செய்திருந்தால்தான், இப்பேர்ப்பட்ட பெருமையை கொண்ட இந்த இடத்திற்கு நாம் வர முடியும் என்பதை உணர்ந்தேன். ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானத்தில் உணவு அருட்பிரசாதமாக இருக்கிறது. அதை உண்ணுகின்ற மக்களுக்கு பசி நீங்குவதோடு, சித்தர்களின் அருளும் ஆசியும் கிடைக்கிறது.

ஓங்காரக்குடிலாசான் உயிர்கள்பால் கருணை கொண்டு ஜீவகாருண்யமே உண்மையான வழிபாடு என்ற தன்னலமற்ற தொண்டால் இந்த அற்புத செயலை செய்து வருகிறார்கள். தானதருமத்தின் பெருமைகளையும் பயன்களையும் மக்களிடத்து எடுத்துச் சொல்லி அவர்களையும் நிலை உயர அருள் செய்து வருகிறார்கள். ஓங்காரக்குடில் மிகப்பெரிய ஒரு புண்ணிய தலம். இங்கே வந்து சென்றால், இல்லறமும் சிறக்கும், ஞானமும் கைகூடும்.

உடல் ஆரோக்கியத்திற்கு உள்ளம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். ஓங்காரக்குடிலிற்கு வந்து குருநாதரை தரிசனம் செய்து, நாமஜெபம் செய்ய செய்ய, குழப்பத்திலிருந்து விடுபட்டு மிகப்பெரிய மனநிறைவை நான் அடைந்தேன். என்னுடைய நிலையை நான் உணர்ந்து, சைவை உணவை உண்டு, உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டேன். குழப்பத்தில் இருக்கும் போதும், எந்தவொரு செயலை துவங்கும்போதும் ஓங்காரக்குடிலிற்கு வந்து குருநாதரை தரிசனம் செய்வேன். எந்த நோக்கத்திற்கு வந்து தரிசனம் செய்தேனோ, அந்த செயல் வெற்றி பெறும், மனக்குழப்பம் நீங்கும். நான் முன்ஜென்மத்தில் செய்த ஒரு சிறு புண்ணியத்தின் காரணமாகத்தான் இங்கு வர முடிந்தது என்பதை உணர்ந்தேன்.

இவ்வுலகினில் உள்ள எல்லா உயிர்களிலும், கடவுள் இருக்கிறார். ஆகவேதான் நமது குருநாதர் உயிர்க்கொலை செய்யக் கூடாது என்றும், அதன் புலாலை உண்ணக் கூடாதென்றும் சொல்கிறார்கள். எல்லா உயிர்களும் கடவுளால் படைக்கப்பட்டது. தாவர உணவுகள் மனிதனுக்காக படைக்கப்பட்டவை. அதை மீண்டும் மனிதனால் தோற்றுவிக்க முடியும். அதன் இலை, கனி, வித்து போன்றவற்றை பறிப்பதால் அதன் உயிருக்கு ஆபத்து இல்லை. அது மீண்டும் தழைத்து வளரும். ஆனால் ஒரு உயிரைக் கொன்றால், அதை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது. ஆகவே உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, ஜீவகாருண்யத்தை

கடைப்பிடித்து அன்னதானம் செய்து வர வேண்டும். சித்தர்களின் நாமஜெபம் செய்து கொண்டே வரவர, நம்முடைய ஆன்மா ஆக்கம் பெறும்.

ஓங்காரக்குடிலில் சித்தர்கள் அரூபமாக இருக்கிறார்கள். அவர்களை பார்க்க முடியாது. ஏனென்றால் நமது ஆன்மாவிற்கு அந்த அளவிற்கு புண்ணியம் இல்லை. ஆனால் நாம் இங்கே அடிக்கடி வந்து செல்லசெல்ல, இங்கே அரூபமாக இருக்கும் சித்தர்கள் ஒளி நம் மீது பட்டுபட்டு, நமது உள்ளம் தெளிவடையும், நம்முடைய வேண்டுகோள்கள் நிறைவேறும். இங்கே முப்பத்து முக்கோடி தேவர்கள், அட்டதிக்கு பாலகர்கள், சித்தரிஷி கணங்களெல்லாம் இங்கே இருந்து அருள் செய்கிறார்கள் என்று சுவடிகள் மூலம் சித்தர்கள் அருளியுள்ளார்கள். சித்தர்களின் மூச்சுக்காற்று ஒளி வடிவில் ஓங்காரக்குடிலில் இருக்கிறது. ஓங்காரக்குடிலிற்கு வந்து குருநாதரை தரிசனம் செய்து, நாமஜெபம் செய்து சித்தர்களை வழிபடும்போது நாம் எண்ணிய எண்ணங்களெல்லாம் நிறைவேறும், நமது வேண்டுகோள்கள் நிறைவேறும், இல்லறம் சிறக்கும், சித்தர்களின் மூச்சுக்காற்று, நம்முடைய மூச்சுக்காற்றோடு கலந்து தீய எண்ணங்களையும், குணக்கேடுகளையும் நீக்கி நமக்கு தெளிவை உண்டாக்கும், உடல் ஆரோக்கியத்தை உண்டாக்கும், நாம் மேற்கொள்கின்ற காரியங்களில் வெற்றி உண்டாகும், இறை சிந்தனையும் தர்மசிந்தனையும் வளரும். ஓங்காரக்குடிலுக்கு வந்தவுடன் செல்வதைவிட, இங்கே நாமஜெபமாகிய தியானத்தை செய்து, இங்கே நடைபெறும் தர்மகாரியங்களில் பங்கேற்று நாம் சில மணி நேரங்கள் இங்கே இருக்கும்போது, சித்தர்கள் ஒளி வடிவில் நம்மை சார்ந்து நமக்கு அருள் செய்வார்கள்.

நமது குருநாதர் அவர்கள் வள்ளலாரின் வழித்தோன்றல் ஆவார்கள். அவர்கள் மிகப்பெரிய தவசி. பார்ப்பதற்கு சாதாரணமாக இருந்தாலும், அவர்களுடைய ஆற்றல் அளப்பரிது. காசிக்கு போனால் தனக்கு பிடித்த ஏதாவதொரு விஷயத்தை விட்டுவிட வேண்டுமென சொல்வார்கள். அதைப்போல நான் ஓங்காரக்குடிலுக்கு வந்தவுடன், நான் அசைவ உணவை உண்ணும் பழக்கத்தை விட்டுவிட்டேன். உயிர்க்கொலை செய்து வழிபடக் கூடிய சிறுதெய்வ வழிபாட்டை தவிர்த்துவிட்டேன். இதுவே எனக்கு கிடைத்த பெரும்பாக்கியமாக கருதுகிறேன். நாமஜெபம் செய்து ஞானிகளை வழிபாடு செய்ய செய்ய, பிற உயிர்களிடத்து இரக்கம் தோன்றியது, தருமசிந்தனை வளர்ந்தது. இதற்கு முன்பு யாராவது ஒருவர் கஷ்டப்படுவதை கண்டால் அது எனக்கு பெரிதாக தோன்றவில்லை. இப்போது அவர்கள் கஷ்டப்படுவதை பார்க்கும்போது, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற இரக்கசிந்தனை வருகிறது.

ஐந்து ஆண்டுகளாக நான் ஓங்காரக்குடிலுக்கு வந்து செல்கிறேன். இதற்கு முன்பு எல்லோரையும் போல சிறுதெய்வ வழிபாட்டில் இருந்து வந்தேன். உண்மை ஆன்மீகத்தை இங்கு வந்தபின்புதான் அறிந்து கொண்டேன். வள்ளலாரின் கொள்கைகளை படித்து அறிந்து கொண்டாலும் அதை முழுமையாக கடைப்பிடிக்க முடியவில்லை. இங்கே வந்து குருநாதரிடம் தீட்சை பெறும்போது, குருநாதர் என் சிரசின் மீது கை வைத்து ஆசி வழங்கினார்கள். அதன் பிறகுதான் எனக்கு வைராக்கியமும் மனத்தெளிவும் வந்தது. குருநாதரிடம் தீட்சை பெற்ற பிறகுதான், நான் படித்தறிந்த வள்ளலாரின் கொள்கைகளை முழுமையாக கடைப்பிடிக்க முடிந்தது.

பிற உயிர்கள் துன்பப்படுவதை பார்க்கும்போது, என்னால் அதற்கு உதவி செய்ய முடியாவிட்டால், சித்தர்களிடம் அந்த உயிருக்காக நான் வேண்டிக்கொள்வேன். ஏனென்றால் எல்லா தருணங்களிலும் நாம் உதவி செய்யக் கூடிய சூழல் இருக்காது.

புண்ணிய பூமியாக, காசிக்கு நிகரான புண்ணிய ஸ்தலமாக விளங்கும் ஓங்காரக்குடிலிற்கு அன்பர்கள் அனைவரும் ஒருமுறையாவது வந்து கலியுக தெய்வமாக விளங்கும் குருநாதரை தரிசனம் செய்து, இங்கே நடைபெறும் அன்னதானத்தில் பசியாறி, இங்கே அமர்ந்து சித்தர்கள் நாமஜெபம் செய்து அருளாசிகளை பெற்று சகல நன்மைகளை பெற்று இன்புற்று வாழுங்கள்.

முருகா சரணம், குருவே சரணம்.

முருகனே அரங்கன், அரங்கனே முருகன்.

குருநாதர் திருவடிகள் சரணம் சரணம்.

குருநாதர் திருவடி பணிந்து,
திரு. சி.மணிகண்டன்,
அரும்பாவூர்.

ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

**துறையூர் ஓங்காரக்குடிலாசான்**
**மகான் கொங்கணமகரிஷியை வேண்டிக் கேட்டுக் கொண்டதினால்**
**மகான் கொங்கணமகரிஷி அடியவர்களுக்காக அருளிய அருள்வாக்கு**

# மகான் கொங்கணமகரிஷி அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed., திருச்சி. செல் : **99655 71837**

1. ஓங்கார ஞானியே அரங்கராசா
ஓங்காரன் (முருகப்பெருமான்) அருள் பெற்ற ஞானதேசிகா
கொங்கண மகரிஷி யானும் ஆசி பலன் தன்னை
குருராசன் (துறையூர் ஓங்காரக்குடிலாசான்) கேட்க இதுகாலம் விளம்பிடுவேன்

2. விளம்பிட அரங்கன் உன் சூலவாம் பிறவி (தோராயமாக சுமார் 300 ஆண்டுகளுக்குள்)
வேள்விதனில் என்னை நீ அழைத்திட
களங்கமற இறங்கி கொங்கணவர் யான்
கண்டுரைக்க சாமான்யனாய் (சராசரி மனிதனாக) வந்து சென்றேன்

3. அப்பப்பா தவபலம் பெருக்கி ஆறுமுகனாய்
ஆற்றல் கூடி அருள்புரிகின்ற இவை பிறவியில்
காப்பாக உன் சேவைக்கு கொங்கணர் யான்
கனிவு கொண்டு அருளி உடனிருக்கின்றேன்

4. இருக்கவே எந்தன் அருளாசி பூரணம் பெற்ற
இப்பிறவியிலும் என்னை காண விரும்பினால்
கருத்தாக பிரம்ம வேளை (வியாழக்கிழமை காலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை) குருவார நாளில்
காட்சி தருவேன் நேரிடையாக கொங்கணர் யானும்

5. யானும் நின் தடத்தில் நறுமணமாக்கி
உயர்ஜோதி போல வந்து உருவத்தினை காட்டி
ஞானதேசிகன் நீ மகிழ செய்வேனப்பா
ஞானிகளும் உன் வழி துணையாய் இருக்க

6. இருக்கவே அரங்கன் உன் நாமம் சொல்லுகின்ற
இணையில்லாத சன்மார்க்க தொண்டர்களுக்கும்
கருத்தாக கொங்கணர் யான் ஆசி தருவேன்
காத்து அவர்கட்கும் நிலை உயர்த்துவேன் கொங்கணர் என் ஆசி முற்றே.

மகான் கொங்கணமகரிஷி அருளிய அருள்வாக்கு ஆசி நூலின் சாரம் :

அடியவர்கள் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து ஒவ்வொரு வியாழக்கிழமை காலை பிரம்ம முகூர்த்தமான 4.30 மணியில் இருந்து 6.00 மணி வரை மகான் கொங்கணமகரிஷியை வேண்டி உள்ளம் உருக தியானம் செய்தால், அவர்களுக்கும் காட்சி தருவேன் என்று அருளியுள்ளார் மகான் கொங்கணமகரிஷி. இது கோடானு கோடி ஆண்டு தவம் செய்து வெற்றிக் கண்ட மகான் கொங்கணமகரிஷியின் அருள்வாக்கு ஆகும்.

–சுபம்–

**ஈசனாம் கொங்கணர் எந்தை திருவடியை**
**நேசமுடன் போற்றிட நினைத்தவை கைகூடுமே!**

**- மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்.**

<u>அடியவர்களுக்காக மகான் கொங்கண மகரிஷி ஆசி பெற குருவருள் வேண்டி...</u>

**D.ராம்குமார்,**

**தி கோயம்புத்தூர் பேப்பர்ஸ்,கோவை.**

ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**

**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 60 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம், மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

## அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |


**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

...................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at “Thuraiyur” or “Tiruchirapalli”**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

## தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

**உயிர் இரக்கமே இறைவழிபாடு....**

**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

**ம. அருள் பிரகாசம்**

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

Cell : 98841 27766 , 94449 88877

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. –குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

No.72A – 100 அடி ரோடு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828. ✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

என்றுமோர் நிலையாய் என்றுமோர் இயலாய்
என்றும்உள் ளதுவாம் என்தனிச் சத்தே
அனைத்துலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும்
இனைத்தென அறியா என்தனிச் சத்தே
பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இதுவெனற்கு அரிதாம் என்தனிச் சத்தே
ஆகம முடிகளும் அவைபுகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என்தனிச் சத்தே
சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே
இத்தகை வழுத்தும் என்தனிச் சத்தே 1210

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.
Builders & Estates
Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

# கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

# இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

காலை 6.00 முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு
ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்
தியானம் (நாமஜெபம்)

காலை 7.30 பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம்.

காலை 8.00 ஓங்காரக்குடிலில் அன்னதானம்

மதியம் 1.00 ஓங்காரக்குடிலில் அன்னதானம்

**மதியம் 3.00** முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்**

மாலை 5.00 கிராம அன்னதானம்

மாலை 6.00 அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)
ஆசான் அகத்தீசர் வழிபாடு

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,
113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,
வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ____________________

முகவரி : ____________________

____________________

ஊர் : ____________ பின்கோடு ____________

வட்டம் : ____________ மாவட்டம் ____________

தொலைபேசி : ____________ (கைபேசி) ____________

**சந்தா செலுத்தும் முறை**

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : ............ தேதி : ............ ரூபாய் : ............

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்